# அடையாளங்கள்
# மனிதக் கடத்தல்

**மனிதக்** கடத்தற் குற்றங்கள் மனிதர்களின் சுதந்திரத்தை அகற்றுவதுடன் அவர்களது கண்ணியத்தை இல்லாமற் செய்கின்றமையால் மனித உரிமைகளை வெறுக்கத் தக்க விதமாக மீறுகின்றவை எனக் கருதப்படுகின்றன. அவற்றுக்கு எதிராகப் போரிடுவதற்கான உலக நாடுகள் முயன்ற போதிலும் இம்முயற்சிகளின் வெற்றிக்கு உலகளாவிய மேம்பட்ட விழிப்புணர்வு, சர்வதேச ஒத்துழைப்பு, தொடர்ச்சியான ஒத்தியங்கல் என்பன தேவைப்படுகின்றன.

சவூதி அரேபிய இராச்சியம் மனிதக் கடத்தலை எதிர்த்துப் போரிடுவதற்காக மனிதர்களின் கண்ணியத்தை மீறுகின்ற எல்லாச் செயற்பாடுகளையும் தடை செய்வதுடன் மனிதர்களின் கண்ணியத்தை மேம்படுத்திக் காட்டவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் செய்யும் இஸ்லாமிய ஷரீஆவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியொழுகும் அடிப்படையில் தனது தொடர்ச்சியானதும் நிலையானதுமான முயற்சியை மேற்கொள்கிறது.

சவூதி அரேபியா மனிதக் கடத்தற் குற்றங்களை எதிர்த்துப் போரிடுவதற்கான சட்டங்களையும் ஒழுங்குறுத்தல்களையும் ஏற்படுத்தியிருப்பது மட்டுமன்றி அவ்வொழுங்குறுத்தல்களை நடைமுறைப்படுத்தவும் அவற்றை ஒழுகி நடக்கவும் தேவையான முயற்சிகளை மேற்கொள்வதிலும் அவற்றைச் செயற்படுத்துவதற்கான செயன்முறைகளைக் கண்டு கொள்வதிலும் கூட முனைப்பாக இருக்கிறது.

ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார, சமூக நிலைமைகளைப் பொறுத்து மனிதக் கடத்தலின் பல்வேறு வகைகளும் முறைகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்ற போதிலும், நீதியின் முன்னிறுத்தப்பட வேண்டிய குற்றவாளிகள் காணப்படுகின்ற அதே வேளை, தமக்குப் பாரிய பாதகத்தை ஏற்படுத்தியனவான தமக்கெதிராக இழைக்கப்பட்ட குற்றத்தின் தாக்கங்களைப் பற்றிக் கருத்திற் கொள்வதுடன் கவனிப்பும் உதவியும் தேவைப்படுகின்றோரான பாதிப்புக்கு உள்ளானோரும் காணப்படுகின்றனர்.

அவர்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்குவதற்காக அவர்களைத் தயார் செய்யவும் தேவையானவாறு கடத்திக் கொண்டு செல்லப்பட்ட பாதிப்புக்குள்ளானோரைக் கண்டறியவும் அவர்களைப் பாதிக்குள்ளானோரென வேறு பிரித்தறியவும் முக்கிய தன்மைகளும் சுட்டிகளும் காணப்படுகின்றன. எனவே, மனிதக் கடத்தலின் பாதிப்புக்குள்ளானோரையறிந்து வேறு பிரித்தறிய உதவும் வகையில் பாதுகாப்பு, நீதி, மருத்துவப் பராமரிப்பு, சமூக சேவைகள் என்பவற்றைச் சேர்ந்தோரும் ஏனைய பொருத்தமான ஆட்களும் இச்சுட்டிகளுடன் தம்மைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## மனிதக் கடத்தல் பற்றிய பொதுவான அடையாளங்கள்

**கடத்திச் செல்லப்படும் ஆட்களை பின்வருவனவற்றிற் சிலவற்றின் மூலம் வகைப்படுத்தப்படலாம்:**

- தமது நகர்வுகள் கண்காணிக்கப்படுகின்ற அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற அடையாளங்களை வெளிப்படுத்துதல்.
- தாம் வெளியேற அனுமதிக்கப்படாத குறிப்பான பிரதேசமொன்றில் வேலை செய்தல்.
- தம் விருப்புக்கு மாறாக வேலை செய்ய வேண்டியிருப்பதாகவும் கடன் சுமையைக் கொண்டிருப்பதாகவும் நம்புதல்.
- அச்சமும் பதற்றமும் அடைந்தோராகக் காணப்படுதல்.
- வன்முறைக்கு ஆளாகியிருத்தலும் தாக்குதலுக்கு அகப்பட்டமையால் காயங்களால் அவதியுறலும்.
- தமக்கு அல்லது தமது குடும்ப உறுப்பினர்களுள் ஒருவருக்குத் தீங்கு விளைவிக்கப்பட்டிருத்தல்.
- குறிப்பான வேலைகளில் ஈடுபடுவோர் அடையும் காயங்களால் அல்லது இயலாமைகளால் அவதியுறல்.
- அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் அச்சத்துக்கு ஆளாகியிருத்தல்.
- வசிப்பிடம், வேலை முறைகள் என்பவற்றுக்குப் பொருத்தமற்ற தமது நிலைமையை வெளிப்படுத்த அஞ்சுதல்.
- தமது ஆவணங்கள் ஏனையோர் வசமிருப்பதால், தமது ஆளடையாளத்தை எண்பிக்கும் கடவுச்சீட்டுக்களையோ ஆவணங்களையோ கொண்டிராமை.
- ஆள்மாறாட்டம் செய்யப்பட்ட கடவுச்சீட்டுக்களையும் அடையாள ஆவணங்களையும் கொண்டிருத்தல்.
- உள்ளூர் மொழியைப் பேசாமை அல்லது அதில் நன்கு பரிச்சயமில்லாமை.
- தமது வசிப்பிடத்து அல்லது வேலையிடத்து முகவரியை அறிந்திராமை.
- ஏனையோர் அவர்களுடன் நேரடியாக உரையாடும் போது தம் சார்பாக மற்றையோரைப் பேச அனுமதித்தலும் தாம் மற்றையோரில்

தங்கியிருத்தலும்.

- வேறு யாரிடமிருந்தோ அறிவுறுத்தல்களைப் பெற்றவாறு செயற்படுதல்.
- வேலை நிலைமைகளைப் பேசித் தீர்க்க முடியாதிருத்தல்.
- குறைந்த சம்பளத்தைப் பெறுதல் அல்லது இலவசமாக வேலை செய்தல்.
- உடல் அல்லது வாய்மொழி மூலமான தண்டனையை அனுபவித்தல்.
- நியாயமற்ற நிலைமைகளில் வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருத்தல்.
- தாம் உழைத்த ஊதியங்களைப் பெற்றுக்கொள்ள இயலாதிருத்தல்.
- விடுமுறை நாட்களைக் கொண்டிராமை.
- நீண்ட நேரம் வேலை செய்தல்.
- தமது குடும்பங்களுடன் அல்லது தமது சமூகச் சூழல்களுக்கு அப்பாற்பட்டோருடன் மட்டுப்பாடான தொடர்பைக் கொண்டிருத்தல் அல்லது தொடர்பின்மை.
- சுதந்திரமாகத் தொடர்பாட முடியாமை.
- மோசமான அல்லது தரங்குறைந்த இடங்களில் வசித்தல்.
- மருத்துவப் பராமரிப்பின்மை.
- போலி வாக்குறுதிகளின் அடிப்படையில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுதல்.
- மனிதக் கடத்தல் நிகழும் இடங்களென அறியப்படும் நாடுகளிலிருந்து வருதல்.
- மனிதக் கடத்தலைச் சுரண்டும் அல்லது அது நிகழும் இடங்களில் அல்லது அவற்றுடன் தொடர்பாக இருத்தல்.
- சென்றடையும் நாட்டுக்குக் கொண்டு செல்லப்படுவதற்காகக் கட்டணம் செலுத்தியிருத்தலும், சென்றடையும் நாட்டில் இந்நோக்கத்துக்காக ஏனையோருக்காக வேலை செய்யவும் சேவைகளை வழங்கவும் வேண்டியிருத்தல்.

## வலுக் கட்டாயமாக வேலை வாங்கப்படுவதன் அடையாளங்கள்

**வலுக் கட்டாயமாக வேலை வாங்கும் நோக்கத்துக்காகக் கொண்டு செல்லப்பட்டோரைப் பின்வருவன மூலம் அடையாளங் காணலாம்:**

- தாம் வேலை செய்யும் இடத்திலேயே கூட்டமாக வாழ்வதும் அரிதாகவே அவ்விடத்தை விட்டுச் செல்வதும்.
- பொருத்தமற்ற இடங்களில் வாழ்தல்.
- தாம் செய்யும் வேலைக்கென ஒதுக்கப்பட்ட ஆடைகளை அணியாதிருத்தல்.
- தாம் உழைத்த ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமை.
- தொழில் ஒப்பந்தமொன்றைக் கொண்டிராமை.
- அவர்களது வேலை நேரங்கள் மிகக் கூடியனவாயிருத்தல்.
- போக்குவரத்து, வீட்டு வசதி போன்ற சில சேவைகளைப் பெற்றுக் கொள்ள தொழில் தருநரில் தங்கியிருத்தல்.
- வசிப்பிடத்தைத் தெரிவு செய்யும் உரிமையின்றி இருத்தல்.
- தொழில் தருநருடனேயன்றி வீட்டிலிருந்து வெளிச் செல்லாமை.
- சுதந்திரமாக நடமாட முடியாமை.
- அவர்களை வேலையிடத்திலேயே வைத்திருக்கச் செய்யும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆட்பட்டிருத்தல்.
- தண்டப் பணம் மூலம் தண்டிக்கப்படுதல்.
- அவமரியாதை, மோசமாக நடத்தப்படுதல், அச்சுறுத்தல் அல்லது வன்முறை என்பவற்றுக்கு ஆட்படுதல்.
- அடிப்படைப் பயிற்சி, தொழின்முறை அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றுக்கான அணுகல் இல்லாமை.

**மேலும், பின்வருவனவற்றை அவதானிப்பதன் மூலம் வலுக் கட்டாயமாக வேலை செய்விக்கப்படுவோரின் இருப்பைக் கண்டு கொள்ளலாம்:**

- வேலையிடத்தில் உள்ளூர் மொழியிலன்றி வேறு மொழிகளில் அறிவித்தல்கள் காணப்படுதல்.
- வேலையிடத்தில் தொழில் சார் சுகாதாரமும் பாதுகாப்பும் பற்றிய அறிவித்தல்கள் இன்மை.
- தொழில் தருநரால் வேறு நாடுகளிலிருந்து வரும் தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான ஆவணங்களைக் காண்பிக்க முடியாமை.
- தொழில் தருநரால் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள் என்பன பற்றிய பதிவுகளைக் காண்பிக்க முடியாமை.
- சிறுவர்கள் இயக்கக்கூடியவாறு கருவிகள் வடிவமைக்கப்பட்டிருத்தல் அல்லது திருத்தப்பட்டிருத்தல்.
- தொழிலாளர் சட்டங்களை மீறுவதற்கு ஆதாரமாகும் அடையாளங்கள் காணப்படுதல்.

## வீட்டு வேலையாட்களைச் சுரண்டுவதன் அடையாளங்கள்

**சுரண்டலுக்கு ஆட்படும் வீட்டு வேலையாட்களை பின்வருவன மூலம் அடையாளங் காணலாம்:**

- ஓய்வெடுக்கவும் உறங்கவும் விசேடமான இடமில்லாமை.
- பொதுவான இடத்தில் அல்லது பொருத்தமற்ற இடத்தில் உறங்குதல்.
- அவர்கள் வீட்டில் வசித்த போதிலும், அவர்கள் தப்பிச் சென்று விட்டதாக அல்லது வேலையை விட்டுச் சென்று விட்டதாக தொழில் தருநர் அறிவித்தல்.
- சமூகத் தேவைகளுக்காக வீட்டிலிருந்து வெளிச் செல்லாமை.
- தொழில் தருநருடனேயன்றி வீட்டிலிருந்து வெளிச் செல்லாமை.
- மிஞ்சிய உணவுகளையேயன்றி உண்ண உணவின்றியிருத்தல்.
- அவமரியாதை, மோசமாக நடத்தப்படுதல், அச்சுறுத்தல் அல்லது வன்முறை என்பவற்றுக்கு ஆட்படுதல்.

## சிறுவர்களைக் கொண்டு செல்வதன் அடையாளங்கள்

**கொண்டு செல்லப்பட்டுள்ள சிறுவர்களை பின்வருவனவற்றின் மூலம் கண்டறியலாம்:**

- அவர்களால் தமது பெற்றோருடனோ குடும்பங்களுடனோ தொடர்பாட முடியாமை.
- அவர்கள் அஞ்சியோராகக் காணப்படுவதும் அவர்களின் ஒத்த வயதுச் சிறுவர்களின் பொதுவான நடத்தைகளுக்கு மாற்றமான முறையில் நடத்தலும்.
- அவர்கள் வேலை நிலைமைக்குப் புறம்பாக தமது வயதைக் கொண்ட நண்பர்களைக் கொண்டிராமை.
- அவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. அவர்களால் கல்வி பெற முடியாமை.
- தாம் வசிக்கப் போதியதாகாத இடங்களில் வசித்தல்.
- (குடும்பத்தின்) ஏனைய உறுப்பினர்களுடனன்றி அவர்கள் தமது உணவை உட்கொள்ளல்.
- அவர்களுக்கு மீதமான உணவுகளை மட்டுமே வழங்கப்படுதல்.
- அவர்கள் சிறுவர்களுக்குப் பொருத்தமற்ற வேலைகளைச் செய்தல்.
- அவர்கள் யாரும் துணை வராமல் அல்லது உறவினரல்லாத ஆட்களின் குழுக்களுடன் பயணம் செய்தல்.

**மேலதிகமாக, கொண்டு செல்லப்பட்ட சிறுவர்களின் இருப்பை பின்வருவனவற்றை அவதானிப்பதன் மூலம் கணிக்கலாம்:**

- துணைவர் எவருமின்றி ஒரு பிள்ளை காணப்பட்டதாக பெரியவர் ஒருவர் கூறுதல்.
- சட்ட விரோதமான தத்தெடுத்தலுடன் தொடர்பான சம்பவங்கள் காணப்படுதல்.
- சிறுவர்கள் துணவர் எவருமின்றி, வாடகை வண்டிகளுக்கான தொலைபேசி எண்களுடன் காணப்படுதல்.
- கைம்முறைத் தொழில்களுக்காக பொதுவாக அணியப்படும் ஆடைகள் சிறுவர்களுக்குப் பொருத்தமான அளவில் காணப்படுதல்.
- தொழிற்சாலைகள் போன்ற பொருத்தமற்ற இடங்களில் சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்கள், கட்டில்கள், ஆடைகள் என்பன காணப்படுதல்.

## பிச்சை நோக்கம் கடத்தல் குறிகாட்டிகள்

**பிச்சையெடுத்தல், சிறு குற்றங்களை இழைத்தல் என்பவற்றுக்காகக் கொண்டு செல்லப்படுவோரைப் பின்வருவனவற்றின் மூலம் கண்டறியலாம்:**

- சிறுவர்களாகவோ, முதியவர்களாகவோ, குடிவருவோராகவோ இருப்பதும் பெரும்பாலும் பொதுவிடங்களில் பிச்சையெடுத்தலும்.
- உறுப்பு நீக்கத்தினால் ஏற்பட்டதைப் போன்ற அங்கவீனங்களைக் கொண்டிருத்தல்.
- சிறிய எண்ணிக்கையான பெரியவர்களுடன் குழுவாகப் பயணம் செய்யும் ஒரே தேசியத்தை அல்லது இனக் குழுவைச் சேர்ந்த சிறுவர்கள்.
- ஒரே தேசியத்தை அல்லது இனக் குழுவைச் சேர்ந்த பெரியவர்களால் துணை வருவோர் எவருமின்றிக் கண்டறியப்பட்ட சிறுவர்கள்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச் செயல்களைப் புரியும் கூட்டத்தினருடன் கலந்து கொள்ளல்.
- ஒரே தேசியத்தின் அல்லது இனக் குழுவின் கூட்டத்தினராயிருத்தல்.
- அவர்கள் போதிய பணத்தைச் சேகரிக்காமல் அல்லது திருடாமலிருந்தால் தண்டிக்கப்படுதல்.
- தமது கூட்டத்தினருடன் சென்றடையும் நாட்டுக்குப் பயணமாவதும் அவர்களுடனேயே வசிப்பதும்.
- தமது தாய் தந்தையரல்லாத பெரியவர்களுடன் வசித்தல்.
- ஒவ்வொரு நாளும் குழுக்களாக நீண்ட தூரம் பயணம் செய்தல்.
- பாதிப்புக்குள்ளானோரெனக் கருதப்படுவோரின் நகர்வு குறிப்பான ஒரு கால கட்டத்தில் பல்வேறு நாடுகளிலும் காணப்படுதல்.
- பாதிப்புக்குள்ளானோரெனக் கருதப்படுவோர் மற்றொரு நாட்டில் பிச்சையெடுத்தல் அல்லது சிறு குற்றங்களை இழைத்தல்.

## பாலியற் சுரண்டலின் அடையாளங்கள்

**பாலியற் சுரண்டல் நோக்கத்துக்காகக் கொண்டு செல்லப்படுவோரைப் பின்வருவனவற்றின் மூலம் கண்டறியலாம்:**

- அவர்களது சுயமான நகர்வை மட்டுப்படுத்துவதற்கு மேலதிகமாக, அவர்களைக் கடத்திக் கூட்டிச் செல்வோர் அவர்களுடன் செல்வதும் அவர்களைக் கண்காணிப்பதும்.
- அவர்களைச் சுரண்டுவோரின் "உரித்துரிமையைப்" புலப்படுத்தும் பச்சை குத்தியிருத்தல் அல்லது வேறு அடையாளங்களைக் கொண்டிருத்தல்.
- அவர்கள் தாம் வேலை செய்யுமிடத்திலேயே உறங்குதல்.
- அவர்கள் கூட்டமாக வாழ்வதும் பயணம் செய்வதும்.
- அவர்கள் உள்ளூர் மொழியில் பாலியலுடன் தொடர்பான சொற்களைத் தவிர வேறெதையும் அறியாதிருத்தல்.
- அவர்களிடம் அவர்களது சொந்தப் பணம் இல்லாதிருத்தல்.
- அவர்களால் தமது ஆளடையாளத்தைக் குறிக்கும் ஆவணங்களை வழங்க முடியாமை.